Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC. 47/2026** |
| Deposition of witness for | :: | **PW. 4** |
| **Name** | :: | **ராமேஸ்வரன் ( சார்பு ஆய்வாளர் )** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்**
**03.06.2026**
**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ம.ரெட்டியபட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.06.2025 ம் தேதி பகல் 01.00 மணிக்கு நான் மேற்படி காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது மறவர்பெருங்குடி கிராமத்தை சேர்ந்த கந்தையா மகன் சந்தானம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று நிலைய குற்ற எண். 69/2025 சட்டப்பிரிவுகள் 296(ஆ), 329(4), 351(3) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். ( **முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

2. பின்னர் அன்று மதியம் 02.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான மறவர்பெருங்குடி கிராமத்தில் உள்ள வாதியின் வீடு அருகே சென்று சாட்சிகள் பரமசிவம், அஞ்சலி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்

செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.4 ஆகவும் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

3. பின்னர் அன்றைய தினம் புகார்தாரர் சந்தானம் சாட்சிகள் தங்கபொன்னு, கருப்பசாமி, காளிதாஸ் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான பரமசிவம், அஞ்சலி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. பின்னர் வழக்கின் விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரியை தேடி வந்த அன்றைய தினம் மாலை 03.30 மணிக்கு நிலையத்தில் ஆஜரான இவ்வழக்கின் எதிரியான ராஜ்மோகன் என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நிலைய பாரா வசம் ஒப்படைத்து குற்றமானது பிணையில் விடக்கூடிய குற்றம் என்பதால் தக்க இருநபர் ஜாமீனில் நிலைய பிணையில் விடுவித்தேன்.

5. பின்னர் அன்றைய தினம் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரி ராஜ்மோகன் மீது 296(ஆ), 329(4), 351(3) BNS ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சொன்ன மாதிரி சொன்ன நாள் நேரத்தில் அ.சா.1 னிடம் புகார் மனுவைப் பெற்று வழக்கினை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன நாள் சொன்ன நேரத்தில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை.**